# பரம்பொருள்– (விஶிஷ்டாத்வைத) வைணவ அத்வைத ஒப்புநோக்கு

## (ஸுதர்ஶநர் ஸ்ரீ.உ.வே.க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார்ஸ்வாமி)

**(12–12–75 அன்று ஸுதர்ஶநர் ஆற்றிய உரையின் சுருக்கம்)**

விஷ்ணுவைப் பரம்பொருளாகக் கொண்ட மதம் வைணவமாகும். வேதங்களிலும், சங்க இலக்கியங்களிலும் இந்த மதம் மிகுதியாகப் பேசப்பட்டுள்ளது. நம் தமிழ் நாட்டில் அவதரித்த ஆழ்வார்களாலும், அவர்கள் வழிவந்த ஸ்ரீராமாநுஜர் முதலான ஆசார்யர்களாலும் இம்மதம் உபதேசத்தின் மூலமும், நூல்களாலும் மிகவும் பிரசாரம் செய்யப்பட்டது. தத்த்வஹித புருஷார்த்தக் கொள்கைகளையிட்டு இம்மதம் 'விஶிஷ்டாத்வைதம்' என்றும், பரம்பொருட்கொள்கையையிட்டு 'வைஷ்ணவம்' என்றும் வழங்கப்படுகிறது. ஆக தமிழ்நாட்டில் 'வைணவம்' என்னும் சொல் விஶிஷ்டாத்வைத வைணவத்தையே குறிக்கும்.

ஆழ்வார்களுக்குப்பின், அவர்களது அருளிச்செயல்களோடு தொடர்பில்லாத ஆதிசங்கராசார்யர் வேதவாக்யங்களுக்கு ஒருவிதமாகப் பொருள்கொண்டு 'அத்வைதமதம்' என்று இப்போது வழங்கும் மதத்தை பாரததேஶம் முழுவதும் பிரசாரம் செய்தார். அவருக்குப் பின், ஆழ்வார்களை அடியொற்றிய நாதமுனிகள், யாமுந முனிகள், ஸ்ரீராமாநுஜாசார்யர் முதலான ஆசார்யர்கள் நாடுமுழுவதும் விஶிஷ்டாத்வைத மதத்தைப் பரப்பினர். ''அத்வைதம்'' ''விஶிஷ்டாத்வைதம்'' என்னும் சொற்களின் பொருளை முதலில் நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

''த்$_3$வயோர்ப$_4$ாவ: த்$_3$விதா; த்$_3$விதைவ த்$_3$வைதம்; ந த்$_3$வைதம்–அத்$_3$வைதம்'' என்று வடமொழியிலக்கணப்படி அத்$_3$வைத பதத்தை விரிப்பர். அதாவது –''எந்த மதத்தில் இரண்டு பொருள்கள்ஒப்புக்கொள்ளப்படுவதில்லையோ, அது அத்வைதம்' என்பது இதன் பொருள். ஆக, அத்வைத மதத்தில் ஒரே பொருள் மெய்ப்பொருளாக ஒப்புக் கொள்ளப் படுகிறது. வேறு எந்த மெய்ப்பொருளும் இல்லை என்றதாகிறது. இதற்கு நேர்மாறாக, ஸ்வதந்த்ரமான ஓர் பரம்பொருளும், அதைக்காட்டிலும் தனிப்பட்ட பரதந்த்ரமான உலகும், ஆக இரண்டு பொருள்களை உண்மையாக ஒப்புக்கொள்வது த்வைத மதமாகும்.

இனி, 'விஶிஷ்டாத்வைதம்' என்னும் பதத்தின் பொருளை ஆராய்வோமாக. ''**விஶிஷ்டஸ்ய (ப்$_3$ரஹ்மண:) அத்$_3$வைதம்–விஶிஷ்டாத்வைதம்**'' என்று வடமொழியிலக்கணப்படி விஶிஷ்டாத்வைத பதத்தை விவரிப்பர். அதாவது – ''எந்த மதத்தில் பல பொருள்களோடு பிரிக்கமுடியாதபடி கூடிய பரம்பொருள் ஒன்றேயாக ஒப்புக்கொள்ளப்படுகிறதோ, அது விஶிஷ்டாத்வைதம்'' என்பது இதன் பொருள்.

வேதவாக்யங்கள் ''பேதஶ்ருதி'' ''அபேதஶ்ருதி'' என்று இருவகைப்பட்டவையாய் உள்ளன. ப்ரஹ்மமாகிற

பரம்பொருளும், அறிவுள்ள சித்தும் (ஜீவரும்), அறிவற்ற அசித்துமடங்கிய உலகமும் வெவ்வேறு என்று கூறுகிற வாக்யங்கள் 'பேதஶ்ருதி' எனப்படும். இவையிரண்டும் ஒன்றே எனக்கூறுகிற வாக்யங்கள் 'அபேதஶ்ருதி' எனப்படும். மேலெழப்பார்க்கும்போது முரண்பட்டவையாகத் தோன்றும் இவ்விருவகை வாக்யங்களை அத்வைதமதம் பின்வருமாறு பொருந்தவிடுகிறது. " 'எவ்விதமான வேறுபாடுமற்ற ஞானஸ்வரூபமான ஒன்றே மெய்ப்பொருள்' என்றும், 'அதுவே மாயையால் மறைக்கப்பட்டு அறிவுள்ள பல ஜீவர்களாகவும், அறிவற்ற அசேதநப் பொருள்களாகவும் காட்சியளிக்கிறது' என்றும் அபேதஶ்ருதிகள் கூறுகின்றன; பேதஶ்ருதிகள் பொய்த் தோற்றமான உலகில் உள்ள வேறுபாடுகளைக் காட்டுகின்றன" என்கிறது அத்வைதமதம். ஆக, இம்மதத்தில் அபேதஶ்ருதிகளுக்கு முக்யத்வமும், பேதஶ்ருதிகளுக்கு அமுக்யத்வமும் கொள்ளப்படுகின்றது என விளங்குகிறது.

த்வைதமதத்தில் இதற்கு நேர்மாருக – உலகமும், பரம்பொருளும் தனித்தனி உண்மையான பொருள்களே என்று கொள்ளப்படுகையால் பேதஶ்ருதிகளுக்கு முக்யத்வம் கொடுக்கப்படுகிறது. "ப்ரஹ்மமும் உலகமும் ஒன்றே" என்று கூறும் அபேதஶ்ருதிகள் – அரசனுக்கு குடிகள் அடங்கியிருப்பவர்கள் என்னும் கருத்தில் 'இந்நாடு முழுவதும் இவ்வரசனே' என்று கூறுவதுபோலே, 'ப்ரஹ்மத்திற்கு உலகம் அடங்கியிருப்பது என்னும் பொருளைத் தருகின்றன' என்று த்வைதமதத்தில் கொள்ளப்படுவதால், அம்மதத்தில் அபேதஶ்ருதிகளுக்கு அமுக்யத்வம் கொள்ளப்படுகிறது என விளங்குகிறது.

இனி, விஶிஷ்டாத்வைத மதத்தில் – மேலெழப்பார்க்கும்போது, முரண்பாடுடையனவாகத் தோன்றும் 'பேதஶ்ருதி' 'அபேதஶ்ருதி' என்னும் இவ்விருவிதமான வாக்யங்களும், 'கடகஶ்ருதி' என்னும் மூன்ருவது வகையான வாக்யங்களைக் கொண்டு சமரசப்படுத்தப்படுகையால், எல்லா வேதவாக்யங்களுக்கும் முக்யத்வம் கொடுக்கப்படுகிறது. அதாவது – உலகனைத்தும் பரம்பொருளான நாராயணனுக்கு ஶரீரமென்றும், அவன் அவ்வுலகை உள்நுழைந்து நியமிக்கும் ஆத்மா என்றும் பல வேதவாக்யங்கள் முழங்குகின்றன. இவையே கடக ஶ்ருதிகள் (பேத அபேத ஶ்ருதிகளை சமரசப்படுத்தும் வாக்யங்கள்) எனப்படுகின்றன. இவை அவ்விருவிதமான வாக்யங்களையும் எப்படி சமரசப்படுத்துகின்றன? எனில்; பேதஶ்ருதிகள் ப்ரஹ்மத்தையும் உலகையும் வெவ்வேறு மெய்ப்பொருளாகக் கூறுவது உண்மையானதே. ஆனாலும், த்வைதிகள் கூறுவதுபோல் அவை தனித்தனியானவை அல்ல. ப்ரஹ்மத்தோடு ஶரீரமாக – விட்டுப்பிரிக்கமுடியாதபடி – ஒன்றிநிற்பது உலகம். உயிரான ப்ரஹ்மமில்லையேல் உடலான உலகம் இல்லை என்னும்

படி ப்ரஹ்மமும் உலகமும் இணைந்திருக்கின்றனவாகையால், இரண்டும் ஒன்றே என்பதும் முக்யமே. ஆக, கணக்கற்ற சேதநாசேதநப் பொருள்களடங்கிய உலகினுள், உடல்மிசை உயிரெனக் கரந்து (மறைந்து) நாராயணனுகிற பரப்ரஹ்மம் எங்கும் பரந்திருக்கிருனுகையாலே, ப்ரஹ்மம் ஒன்றே மெய்ப்பொருள் என்று கூறும் அபேதஶ்ருதிகளுக்கும் முக்யத்துவம் கொடுக்கப்பட்டதாகிறது.

இனி, அத்வைதிகள் பரம்பொருளை எவ்வித வேறுபாடுமற்றது என்று ஒப்புக்கொள்கிருர்கள் என்று கூறியதைச் சிறிது விளக்குவோம். உலகிலுள்ள எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும் அது மூன்று வகையான பேதங்களை (வேறுபாடுகளை) உடையதாகக் காணப்படுகிறது. அவையாவன – ஸஜாதீயபேதம், விஜாதீயபேதம், ஸ்வகத பேதம் என்பவை. இதை ஓர் உதாரணத்தைக்கொண்டு விளக்குவோம். ஓர் மரத்தை எடுத்துக்கொண்டால், மற்ற மரங்கள் அதோடு ஒரே ஜாதியை (வகுப்பைச்) சேர்ந்தவையாகையால் ஸஜாதீயங்கள் எனப்படுகின்றன. ஆக, அந்த மரத்துக்கு மற்ற மரங்களோடு உள்ள வேறுபாடு ஸஜாதீயபேதம் எனப்படுகிறது. முற்கூறிய மரத்தோடு வேறுபட்ட ஜாதியை (வகுப்பைச்)சேர்ந்த மனிதர்கள் விஜாதீயர்கள் எனப்படுவர். ஆகையால், அந்த மரத்திற்கும், மனிதர்களுக்கும் உள்ள வேறுபாடு விஜாதீயபேதம் எனப்படுகிறது. அந்த மரத்திலேயே அதன் பகுதிகளாயிருக்கும் கிளை, இலை, பூ, பழம், அதன் நிறம் முதலானவை ஸ்வகதங்கள் (தன்னிலேயே இருப்பவை) எனப்படுகின்றன. ஸ்வகதங்களான இவற்றைக்காட்டிலும் மரத்திற்குள்ள வேறுபாடு ஸ்வகதபேதம் எனப்படுகிறது. இப்படி உலகிற்காணும் எந்தப்பொருளை எடுத்துக்கொண்டாலும், அதனிடம் முற்கூறிய மூன்றுவகையான பேதங்களும் இருப்பதைக் காணலாம். ப்ரஹ்மத்திடம் முற்கூறிய மூன்று வகையான பேதங்களும் இல்லை என்று கூறுகிறது அத்வைதமதம்.

இதை இனி விளக்குவோம். ''சிந்மாத்ரமான (அறிவொன்றேயான) ப்ரஹ்மத்தைப்போலே, சிந்மாத்ரமான வேருெரு பொருள் இல்லாமையால் ப்ரஹ்மம் ஸஜாதீயபேதமற்றது. சிந்மாத்ரமல்லாத அசித்தான (அறிவற்றதான) எப்பொருளும் உண்மையாக இல்லாமையால், ப்ரஹ்மம் விஜாதீயபேதமும் அற்றது. சிந்மாத்ரமான அந்த ப்ரஹ்மத்திடம் அதன் பகுதியாக எந்த குணங்களும் உண்மையாக இல்லாமையால் ப்ரஹ்மம் ஸ்வகதபேதமும் அற்றது'' என்கிறது அத்வைத மதம். இதிலிருந்து 1. உலகில் வெவ்வேருக அறியப்படும் ஜீவர்களும் ப்ரஹ்மத்தோடு ஸ்வரூபைக்யம் உடையவர்களே 2. பல வகையாக உலகில் காணப்படும் அறிவற்ற அசேதநப் பொருள்கள் எல்லாம் பொய்யானவை. 3. ப்ரஹ்மத்திடம் தாழ்ந்த

குணங்கள்போலே நல்ல குணங்களும் ஒன்று கூட இல்லை– என்பவை அத்வைத மதத்தின் அடிப்படைக் கொள்கைகள் என விளங்குகிறது.

விஶிஷ்டாத்வைத வைஷ்ணவ மதத்தில், எவ்வுலகிலுமுள்ள எல்லாச் சேதநாசேதநங்களையும் ஶரீரமாகக் கொண்டு, அவற்றை எப்போதும் உள் நுழைந்து நியமிக்கின்றவனாய், எல்லாக் கல்யாணகுணங்களும் நிறைந்தவனான நாராயணன் ஒருவனையே பரம்பொருளாகக் கொள்வதால், ப்ரஹ்மத்திற்கு ஸஜாதீய விஜாதீய ஸ்வகத பேதங்கள் மூன்றுமே உண்டு.

ஜ்ஞாநாநந்தஸ்வரூபனாயிருக்கும் நாராயணனைப் போலவே, ஜ்ஞாநாநந்த ஸ்வரூபர்களாயிருக்கும் கணக்கற்ற ஜீவர்களாகிற ஸஜாதீயர்களையும் எப்போதுமுள்ளவர்களாக ஒப்புக்கொள்வதால், இம்மதத்தில் ப்ரஹ்மத்திற்கு ஸஜாதீயபேதம் உண்டு. ப்ரஹ்மத்தோடு ஸஜாதீயர்களான இந்த ஜீவர்கள் 1.ஸம்ஸார ஸம்பந்தமற்றவர்களாய்ப் பரமபதத்தில் எப்போதுமே அவனோடு கூடியிருக்கும் நித்யர்கள் என்றும், 2.இந்த ஸம்ஸார மண்டலத்திலிருந்து ஒவ்வொரு காலத்தில் மோக்ஷமடைந்த முக்தர்கள் என்றும், 3. இந்த ஸம்ஸாரமண்டலத்திலேயே கட்டுண்டு கிடக்கும் பத்தர்கள் என்றும் மூன்று வகைப்படுவர். ஒவ்வொரு வகையிலும் கணக்கற்றவர்கள் என்றும் உளர் – என்கிறது விஶிஷ்டாத்வைதம்.

அறிவும், ஆநந்தமும் அற்றவையாயிருக்கையாலே – ஜ்ஞாநாநந்தஸ்வரூபனாய், அவற்றை குணமாகவுடையவனாயிருக்கும் நாராயணனைக் காட்டிலும் மிகவும் வேறுபட்ட கணக்கற்ற அசேதநப் பொருள்களையும் ஒப்புக் கொள்ளுகையாலே, இம்மதத்தில் ப்ரஹ்மத்திற்கு விஜாதீயபேதமும் உண்டு. இவ்வசேதநப் பொருள்கள் 1. பரமபதத்திலுள்ள ஶுத்த ஸத்த்வப்பொருள்கள் என்றும், 2. இவ்வுலகிலுள்ள முக்குணமயமான மிஶ்ரஸத்த்வப் பொருள்கள் என்றும், 3. முக்குணமும் அற்றதாகையாலே ஸத்த்வ ஶூந்யம் எனப்படும் காலம் என்றும் மூன்று வகைப்படும். முதல் வகையில் சேர்ந்த ஶுத்தஸத்த்வம் பரமபதத்தில் ஸ்ரீவைகுண்டம் என்னும் நகரம் முதலானவையாகவும், நாராயணன் தான் விரும்பியேற்கும் திவ்யமங்கள விக்ரஹங்களாகவும், நித்யமுக்தர்கள் விரும்பி ஏற்கும் ஶரீரங்களாகவும் பரிணமித்து நிற்கிறது. இவ்வுலகிலுள்ள அசேதநப்பொருள்களைப் போல் இது சேதநரைக் கட்டுப்படுத்துவதன்று. அவர்களுக்குப் பெருமையளிப்பதேயாயிருக்கும். இரண்டாவது வகையைச் சேர்ந்த மிஶ்ரஸத்த்வம் – மூலப்ரக்ருதி என்னும் காரணப்பொருளாகவும், அதன் கார்யங்களான மஹான், அஹங்காரம், பதினொரு இந்த்ரியங்கள், ஐந்து தந்மாத்ரைகள், ஐந்து பூதங்கள் எனும் இருபத்துமூன்று தத்துவங்களாவும், ஆக இருபத்துநாலு தத்துவங்களாகப் பிரிந்து நிற்கிறது. இத்தத்துவங்களிலிருந்து

ப்ரஹ்மாண்டம் முதலாக நமது ஶரீர மீருகப் பல அசேதநப்பொருள்கள் ப்ரஹ்மத்தால் படைக்கப்பட்டு, ஜீவர்களை இவ்வுலகில் கட்டுப்படுத்திவைக்கின் றன. மூன்ருவதான ஸத்தவஶூந்யம் எனப்படும் காலம்—கல்பம் முதலாக, கணம் ஈருகப் பலவகையான பிரிவுகளை உடையதாய், தான் தனித்துக் காணப்படா மல், மற்ற பொருள்களோடு கூடவே காணப்படுவதாய் விளங்குகிறது.

தாழ்ந்தகுணம் ஒன்றும் இல்லாத பரம்பொருளான நாராயணனுக்கு ஜ்ஞாநம், பலம், ஐஶ்வர்யம், வீர்யம், ஶக்தி, தேஜஸ், ஸௌலப்யம் (எளிமை), ஸௌஶீல்யம்(நீர்மை), வாத்ஸல்யம் (பேரன்பு) ஆர்ஜவம் (நேர்மை), ஔதார்யம் (வண்மை) முதலான – ஒவ்வொன்றுமே எல்லைகாணமுடியாத இயல்வான கணக்கற்ற குணங்களை ஒப்புக்கொள்வதால், இம்மதத்தில் ப்ரஹ்மத்திற்கு ஸ்வகதபேதமும் உண்டு.

வேதாந்தங்கள் பல வாக்யங்களில் ஜ்ஞாநம், ஆநந்தம், ஶக்தி, பலம், ஜகத்காரணத்வம் முதலான இயல்வான கணக்கற்ற கல்யாணகுணங்கள் ப்ரஹ்மத்திற்கு உள்ளதாக ஓதுகின்றன. சில வாக்யங்கள் பொதுப்படையாக ப்ரஹ்மம் 'நிர்க்குணம்' (குணமற்றது) என்றும் ஓதுகின்றன.

''இந்த நிர்க்குணவாக்யங்கள் குணத்தைக் கூறும் வேதவாக்யங்களைத் தள்ளிவிடுகின்றன. ஆகையால் ப்ரஹ்மம் கல்யாண குணங்களுமற்றது என்பதே உண்மை'' என்று கூறுகிறது அத்வைதமதம்.

விஶிஷ்டாத்வைதமதமோ வெனில், இரண்டுமே சமவலிமையுள்ள வேத வாக்யங்களாகையால், ஒன்றைக் கொண்டு மற்ருென்றைத் தள்ளுவது சரியல்ல என்றும், இரண்டு வாக்யங்களிலும் மேலெழத்தோன்றும் முரண்பாடு பின்வரும் முறையில் நீங்கிவிடுகிறது என்றும் காட்டுகிறது— நிர்க்குண வாக்யங்கள் பொதுப்படையாக குணங்கள் இல்லை என்கின்றன. சில வாக்யங்கள் தாழ்ந்த குணங்களைக் குறிப்பிட்டு எடுத்து, அவை ப்ரஹ்மத்திற்கு இல்லை என்கின்றன. பல வாக்யங்கள் கல்யாண குணங்களைக் குறிப்பிட்டு எடுத்து அவை ப்ரஹ்மத்திற்கு உண்டு என்று முழங்கு கின்றன. ஒரு வாக்யமாவது முற்கூறிய கல்யாணகுணங்களில் ஒன்றையாவது எடுத்து அது இல்லை என்று கூறவில்லை. இதிலிருந்து – பொதுப்படையாக குணங்கள் இல்லை என்ற நிர்க்குண வாக்யம், குறிப்பிட்டுத் தள்ளப்பட்ட தாழ்ந்த குணங்கள் இல்லை என்று கூறும் கருத்துடையவையென்றே கொள்ள வேண்டும் என விளங்குகிறது – என்கிறது விஶிஷ்டாத்வைதம். இவ்வண்ணமாக பேதாபேதஶ்ருதிகள் விஷயத்திற்போலே, இவ்விஷயத்திலும் விஶிஷ்டாத்வைத மதத்திலேயே எல்லா வேதவாக்யங்களும் முக்கியமாகக் கொள்ளப்படுகின்றன.

சிந்மாத்ரமான ப்ரஹ்மத்தை

அநாதிகாலமாக மாயை, அவித்யை எனப்படும் அஜ்ஞானம் மறைப்பதால் சித்துக்கள் (ஜீவர்கள்) அசித்துக்கள் (அறிவற்ற பொருள்கள்) எனும் வேறுபாடுகள் நிறைந்த உலகமாகிற பொய்த்தோற்றம் உண்டாகிறது என்றும், ''நானே ப்ரஹ்மம்'' என்னும் ஜ்ஞானம் ஜீவனுக்கு உண்டாவதாலே இவ்வஜ்ஞானம் நீங்கி, ஜீவன் தன் நிலேயான ப்ரஹ்மநிலேயை அடைகிருன் என்றும் கூறுகிறது அத்வைதம்.

அநாதிகாலமாக மாயை எனப்படும் அசேதநப்ரக்ருதியின் ஸம்பந்தத்தால் பத்தஜீவர்களுக்கு அஜ்ஞானம் ஏற்பட்டிருக்கிறது என்றும், என்றுமே அஜ்ஞாநத்தின் நாற்றமும் அற்ற ஸர்வஜ்ஞனை பரம்பொருளின் அருளாலே, அவனேப் பற்றிய உண்மை யறிவு பெற்ற ஜீவனுக்கு, அநாதிகாலமா யிருக்கும் அவ்வஜ்ஞானம் நீங்குகிறது. அவன் பரமபதம் சென்று ப்ரஹ்மத்தோடு பெரும்பாலும் ஒத்த பெருமைகளே யுடைய முக்தனுகிருன் என்கிறது விஶிஷ்டாத்வைதம்.

ப்ரஹ்மத்தோடு ஸ்வரூபைக்யம் ஏற்பட்டபின்பு இவ்வுலகிலேயே முக்தி ஏற்படுகிறது என்பது அத்வைதம்.

ப்ரஹ்மத்தைப்பற்றிய உண்மை யறிவு ஏற்பட்டபின் ப்ரக்ருதி ஸம்பந்தம் நீங்கப்பெற்று அப்ராக்ருதலோகம் சென்று, ப்ரஹ்மத்தை அநுபவித்து, அதன் போக்குவீடாகக் குற்றேவல் புரிந்து ப்ரஹ்மத்தை உகப்பிப்பதே மேலான மோக்ஷமாகும் என்கிறது விஶிஷ்டாத்வைதம்.

## முடிவுரை

அத்வைதத்தில் – எவ்வேறுபாடு மற்ற ப்ரஹ்மம் ஒன்றே தத்த்வம் (மெய்ப் பொருள்). விஶிஷ்டாத்வைத வைஷ்ண வத்தில் – சேதநாசேதநங்களடங்கிய உலகோடு கூடிய ப்ரஹ்மம் ஒன்றே தத்த்வம்.

அத்வைதத்தில் – ஜீவப்ரஹ்மங் களுக்கு ஸ்வரூபைக்யத்தைச் சொல்லும் வேத வாக்யங்களால் ஐக்யத்தை நேரே அறிவது ஹிதம். விஶிஷ்டாத்வைதத்தில் – அருளோடு கூடிய பரப்ரஹ்மமே ஹிதம்.

அத்வைதத்தில் – அஜ்ஞானம் நீங்கப் பெற்று ஜீவன் ப்ரஹ்மமாவதே புருஷார்த்தம்; விஶிஷ்டாத்வைதத்தில் – உகப்போடு கூடிய ப்ரஹ்மத்தை அநுபவித்துக் கைங்கர்யம் செய்வதே புருஷார்த்தம்.

இவ்வண்ணமாக, தத்த்வ ஹித புருஷார்த்தக் கொள்கைகளில் விஶிஷ்டாத்வைத வைணவமும், அத்வைதமும் மிகவும் வேறுபட்டிருக் கின்றன. ஒரே வேத ஶாஸ்த்ரங்களே ப்ரமாணமாக ஒப்புக் கொள்ளுகையாகிற ஒரே ஒற்றுமையே அவற்றினிடையே உள்ளது.